# நமது தின கனி

காலை நாளிதழ்

NAMADHU DHINA KANI Daily Morning

| Vol: 01 | Issue: 258 | 4 Pages | 21.4.2024 | Sunday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர்: 01 | இதழ்: 258 | 4 பக்கங்கள் | 21.4.2024 | ஞாயிற்றுக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


## உதயநிதி, பினராயி விஜயனை திட்டி தீர்க்கும் காங்கிரஸ்: 'இந்தியா' கூட்டணியில் பூகம்பம்.. மேட்டர் என்ன?

சென்னை, ஏப். 21

லோக்சபா தேர்தலின் முதற்கட்ட வாக்குப்பதிவு நடந்து முடிந்துள்ள நிலையில், இந்தியா கூட்டணி கட்சிக்குள் புகைச்சல்கள் அதிகரிக்க தொடங்கியுள்ளன. இதற்கு முக்கிய காரணமாக காங்கிரஸ் இருக்கிறது என்பதுதான் பெரும் முரணானதாக இருக்கிறது.

வேலையின்மை, ஜம்மு காஷ்மீருக்கான சிறப்பு அந்தஸ்து நீக்கம், மணிப்பூர் கலவரம், சிஏஏ, ராமர் கோயில், பெட்ரோல், டீசல் விலையுயர்வு, ஜஎஸ்டி, தேர்தல் பத்திரம் இப்படி பல பஞ்சாயத்துக்கு நடுவில்தான் லோக்சபா தேர்தல் தொடங்கியுள்ளது. மேற்குறிப்பிட்ட விஷயங்களில் மத்திய அரசின் மீது உள்ள அதிருப்தியை பயன்படுத்தி ஆட்சியை பிடிக்க காங்கிரஸ் தீவிரமாக முயன்று வருகிறது. இந்த முறையும் கோட்டை விட்டு விட்டால் காங்கிரஸ் கட்சியை மீட்டெடுப்பதே பெரும் சவாலான விஷயமாகிவிடும் என்று கட்சி பல முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது.

குறிப்பாக மாநில கட்சிகளை ஒன்றிணைத்தது காங்கிரசுக்கு பெரிய அளவில் கைகொடுக்கும் என்று சொல்லப்பட்டது. இந்தியா கூட்டணி என்கிற பெயரில் ஆம் ஆத்மி, திரிணாமுல் காங்கிரஸ், சமாஜ்வாடி உள்ளிட்ட கட்சிகளை கூட்டணிக்குள் கொண்டு வந்து இந்த தேர்தலை காங்கிரஸ் எதிர்கொண்டிருக்கிறது.

நேற்று நாடு முழுவதும் 102 லோக்சபா தொகுதிகளில் முதற்கட்ட தேர்தல் நடந்து முடிந்திருக்கிறது. இந்நிலையில், தற்போது கூட்டணி கட்சிகளுடன் காங்கிரஸ் புகைச்சலை கிளப்பி வருகிறது. என்னதான் தேசிய அளவில் மாநில கட்சிகளுடன் கூட்டணி அமைத்திருந்தாலும், மாநிலங்கள் என்று வரும்போது தங்களுடைய வாக்கு வங்கியை மாநில கட்சிகள் விட்டுக்கொடுக்க தயாராக இல்லை.

பஞ்சாப், மேற்கு வங்கம், கேரளா உள்ளிட்ட மாநிலங்களில் ஆம் ஆத்மி, திரிணாமுல் காங்கிரஸ், சிபிஎம், சிபிஐ ஆகிய கட்சிகள் தனித்தே களம் காண்கின்றன. இப்படி இருக்கையில், கேரள முதலமைச்சர் குறித்து ராகுல் காந்தி விமர்சித்து பேசிய விஷயங்கள் இந்தியா கூட்டணிக்குள் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது.



கேரளாவில் தேர்தல் பரப்புரையை மேற்கொண்டராகுல்காந்தி, “இரண்டு மாநில முதல்வர்கள் (ஹேமந்த் சோரன், அரவிந்த் கெஜ்ரிவால்) அமலாக்கத் துறை விசாரணையை எதிர்கொண்டு மத்திய பாஜக அரசால் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். என்னிடம் கூட அமலாக்கத் துறையினர் 55 மணி நேரம் விசாரணை நடத்தியுள்ளனர். எனது எம்.பி. பதவியும் பறிக்கப்பட்டது.

கேரள முதல்வர் பினராயி விஜயன் மீதும் அமலாக்கத் துறை வழக்கு உள்ளது. ஆனால், அவர் இதுவரை வழக்கு விசாரணைக்கு அழைக்கப்படவில்லை, சிறைக்கும் செல்லவில்லை. நான் பாஜகவை 24 மணி நேரமும் விமர்சிக்கிறேன். ஆனால், கேரள முதல்வர் என்னை மட்டும் விமர்சிக்கிறார். பாஜகவை அதிகம் விமர்சிப்பதில்லை. இதில் ஏதோ புதிர் உள்ளது" என்று கூறியிருந்தார்.

இதற்கு பதிலடி கொடுத்த பினராயி விஜயன், "உங்களின் பாட்டி இந்திரா காந்தி பிரதமராக இருந்த போது, நாட்டில் அவசரநிலையை அமல்படுத்தி ஏராளமான இடதுசாரி தலைவர்களை சிறையில் தள்ளினார். அப்போது நானும் கூட சிறையில் அடைக்கப்பட்டேன். நாங்கள் சுமார் ஒன்றரை ஆண்டுகள் சிறையில் இருந்தோம். ஏராளமான விசாரணைகளை எதிர்கொண்டுள்ளோம். எனவே, வழக்கு விசாரணைக்கும், சிறைக்குச் செல்லவும் எங்களுக்கு எந்த அச்சமும் இல்லை. ஆகவே விசாரணை, ஜெயில் போன்றவற்றின் மூலம் எங்களை மிரட்ட முடியாது. நாங்கள் அது பற்றி கவலைப்படுவதில்லை.

ஆனால், காங்கிரஸ் தலைவர்களுக்குதான் சிறைக்குச் செல்வதற்கு அச்சம் உள்ளது. எனவே, அவர்கள் தொடர்ந்து ஆட்சி அதிகாரத்தை அனுபவித்து சொகுசாக வாழ்ந்துவிட்டார்கள். காங்கிரஸில் இருந்து பாஜகவுக்கு தாவிய காங்கிரஸ் தலைவர் அசோக் சவாண், சிறைக்கு செல்ல அஞ்சிதான் கட்சி மாறியதாக கண்ணீர் விட்டு அழுதார் என ராகுலே கூறியுள்ளார். இதன் மூலம் காங்கிரஸ் தலைவர்களுக்கு சிறை என்றால் எவ்வளவு பயம் என்பதைத் தெரிந்து கொள்ள முடியும்" என்று காட்டமாக பதிலடி கொடுத்திருந்தார்.

அதேபோல, தெலங்கானா முதல்வர் ரேவந்த் ரெட்டி, தமிழக அமைச்சர் உதயநிதியின் சனாதனம் குறித்த பேச்சுக்கு கண்டனம் தெரிவித்திருந்தார். அதாவது, "உதயநிதி ஸ்டாலினின் கருத்து தவறானது; அது அவருடைய சிந்தனை, சனாதனம் குறித்த கருத்திற்காக அவர் நிச்சயம் தண்டிக்கப்பட வேண்டும்" என்று கூறியிருந்தார். இப்போதுதான் முதற்கட்ட தேர்தலே முடிந்திருக்கிறது. இன்னும் 441 தொகுதிகளுக்கு தேர்தல் நடத்தப்பட வேண்டி இருக்கிறது. அதற்குள் கூட்டணி கட்சிகளை காங்கிரஸ் விமர்சிக்க தொடங்கியிருப்பது விவாதங்களை கிளப்பியுள்ளது.

கடந்த 2004 பொதுத் தேர்தலில் காங்கிரசுக்கு பெரும்பான்மை கிடைக்காததால் இடதுசாரிகளின் ஆதரவுடன் கட்சி ஐக்கிய முற்போக்கு கூட்டணி அமைக்கப்பட்டது. அப்போது இடதுசாரிகளுடன் கொஞ்சிய காங்கிரஸ், பின்னாட்களில் பல்வேறு மசோதாக்களை கூட்டணி கட்சியின் ஆலோசனையின்றி அறிமுகப்படுத்த தொடங்கியது. அதில் முக்கியமானதுதான் அமெரிக்கா உடனான அணுசக்தி ஒப்பந்தம். இது குறித்து இடதுசாரிகளின் ஆலோசனையின்றி காங்கிரஸ் தன்னிச்சையாக முடிவெடுத்தது.

சனாதனம் பற்றிய கருத்துக்கு உதயநிதியை தண்டித்தே ஆகனும்.. காங்கிரஸ் முதல்வர் ரேவந்த் ரெட்டி ஆக்ரோஷம்சனாதனம் பற்றிய கருத்துக்கு உதயநிதியை தண்டித்தே ஆகனும்.. காங்கிரஸ் முதல்வர் ரேவந்த் ரெட்டி ஆக்ரோஷம்

விளைவு, ஐமுகூ அரசுக்கு அளித்த ஆதரவை இடதுசாரிகள் கடந்த 2008ம் ஆண்டு விலக்கிக்கொ ண்டனர். மட்டுமல்லாது, காங்கிரஸின் நடவடிக்கைக்கு எதிராக நாடு முழுவதும் பெரும் போராட்டத்தையும் நடத்தினர். தற்போது இதேபோன்ற சூழல் மீண்டும் திரும்புவதாக அரசியல் விமர்சகர்கள் கூறியுள்ளனர். அதாவது, கூட்டணிக்காக இனிக்க இனிக்க பேசிவிட்டு, மறுபுறம் தன்னுடைய நலனை மட்டுமே காங்கிரஸ் மையப்படுத்தி செயல்படுகிறது. அதனுடைய வெளிப்பாடுதான் யாரை எதிர்க்கிறோம் என்று தெரியாமல், பிரனாயி விஜயனையும், உதயநிதி ஸ்டாலினையும் விமர்சித்து பேசியிருப்பது என்று அரசியல் விமர்சகர்கள் கூறியுள்ளனர்.

## பாகிஸ்தானில் கனமழை: 87 பேர் உயிரிழப்பு வீடுகள் கடும் சேதம்



பாகிஸ்தான், ஏப். 21

பாகிஸ்தானில் கடந்த ஒரு வாரமாக கனமழை பெய்து வருகிறது. நாட்டின் சில பகுதிகளில் தொடர்ந்து பெய்து வரும் கனமழையால் இதுவரை 87 பேர் பலியாகியுள்ளனர். மேலும், 82 பேர் காயமடைந்துள்ளதாக தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம் (என்டிஎம்ஏ) தெரிவித்துள்ளது.

மழையால் நாடு முழுவதும் 2,715 வீடுகள் சேதமடைந்துள்ளன. கட்டுமான இடிபாடுகள், மின்னல் தாக்குதல் மற்றும் திடீர் வெள்ளம் தொடர்பான சம்பவங்களில் பெரும்பாலான மக்கள் இறந்ததாகவும் தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம் தெரிவித்துள்ளது.

நாட்டின் வடமேற்கு கைபர் பக்துன்க்வா மாகாணத்தில் பெரும்பாலான சேதங்கள் மற்றும் உயிரிழப்புகள் பதிவாகியுள்ளன. அங்கு மட்டும் 36 பேர் உயிரிழந்துள்ளனர். 53 பேர் காயம் அடைந்துள்ளனர்.

தென்மேற்கு பலுசிஸ்தான் மாகாணத்தில் மொத்தம் 15 பேர் பலியாகியுள்ளனர். 10 பேர் காயமடைந்தனர். அதே நேரத்தில் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் பெய்த கனமழையால் 11 பேர் இறந்தனர் மற்றும் 11 பேர் காயமடைந்தனர் என்று தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம் தெரிவித்துள்ளது.

அண்மையில் பெய்த கனமழையால் உயிர்கள் மற்றும் உடைமைகள் இழப்புக்கு ஆழ்ந்த வருத்தத்தையும் தெரிவித்த பாகிஸ்தான் பிரதமர் ஷேபாஸ் ஷெரீப், பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிவாரணப் பணிகளை விரைவுபடுத்தவும், மழை மற்றும் நிலச்சரிவால் மூடப்பட்ட சாலைகளைத் திறப்பதற்கான பணிகளை விரைவுபடுத்தவும் சம்பந்தப்பட்ட துறைகளுக்கு அறிவுறுத்தினார்.

முன்னதாக நேற்று வானிலை முன்னறிவிப்பு அறிக்கையில், தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம் வரும் ஏப்ரல் 22 வரை தொடர்ந்து மழை நீடிக்கும் என்று கணித்துள்ளது. மேலும், எதிர்பார்க்கப்படும் மழை நாட்டின் பல பகுதிகளில் திடீர் வெள்ளத்தைத் தூண்டக்கூடும் என்றும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

## சிரியாவில் துப்பாக்கிச்சூடு: அரசின் ஆதரவு படையைச் சேர்ந்த 22 பேர் பேர் பலி

சிரியா, ஏப். 21

சிரியாவில் குட்ஸ் படைப்பிரிவைச் சேர்ந்த வீரர்கள் பேருந்தில் சென்று கொண்டிருந்தனர். அந்த பேருந்து மீது சிலர் துப்பாக்கிச்சூடு நடத்தினார்கள். இதில் 22 பேர் உயிரிழந்தனர். துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது சுக்னா பகுதியாகும். இது ஐஎஸ் பயங்கரவாதிகள் ஆதிக்கம் செலுத்தும் பகுதியாகும்.

குட்ஸ் படைப்பிரிவைச் சேர்ந்த இவர்கள் அரசுக்கு ஆதரவாகவும், சிரியாவில் ரஷியா ஆதரவு பெற்ற பாலஸ்தீனத்தைச் சேர்ந்த சண்டையிடுபவர்களும் ஆவார்கள்.

இந்த தாக்குதலுக்கு ஐஎஸ் பயங்கரவாதிகள் பொறுப்பேற்கவில்லை. ஆனால் மனித உரிமைகளுக்கான சிரியா கண்காணிப்பகம் இந்த தாக்குதலுக்குப்பின் ஐஎஸ் உள்ளது எனத் தெரிவித்துள்ளது.

13 வருட உள்நாட்டு சண்டையில் குட்ஸ் படைப்பிரிவினர் சிரியா அரசாங்கத்திற்கு ஆதரவாக சண்டையிட்டு வருகிறது. இந்த உள்நாட்டு சண்டையில் சுமார் 5 லட்சம் மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். உள்நாட்டு சண்டைக்கு முன்னதாக இருந்த 23 மில்லியன் மக்களில் பாதிக்கும் மேற்பட்டோர் தங்களது சொந்த இடத்தை விட்டு இடம் பெயர்ந்துள்ளனர்.

குட்ஸ் படைப்பிரிவு பாலஸ்தீனத்தின் இஸ்லாமிக் ஜிஹாத் குரூப்பில் உள்ளது. அதில் இருந்து சிரியாவில் செயல்பட்டு வரும் குட்ஸ் படைப்பிரிவு மாறுபட்டது.

2019ல் ஐஎஸ் படைகள் தோற்கப்பட்ட போதிலும், ஐஎஸ் ஸ்லீப்பர் செல்கள் சிரிய அரசாங்க படைகள், அமெரிக்க ஆதரவு படைகள், குர்திஷ் தலைமையிலான சிரியா ஜனநாயக படைகள் மீது தாக்குதல் நடத்தி வருவதாக குற்றம்சாட்டுப்பட்டு வருகிறது.

## ஐ.நா. சபையில் பாலஸ்தீனத்தை உறுப்பினராக்கும் தீர்மானத்தை அமெரிக்கா தடுத்தது




இஸ்ரேல், ஏப். 21

இஸ்ரேல் பாலஸ்தீனத்தின் காசா முனையைநிர்வகித்து வரும் ஹமாஸ் அமைப்பினர் இடையே போர் நடந்து வருகிறது. இதில் காசாவில் 33 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பலியாகி உள்ளனர். இப்போரில் இஸ்ரேலுக்கு அமெரிக்கா ஆதரவாக உள்ளது.

இந்த நிலையில் 193 உறுப்பினர்களைக் கொண்ட ஐ.நா. பொதுச்சபையில் பாலஸ்தீனத்தை முழு உறுப்பினராக அனுமதிக்க வேண்டும் என்ற முயற்சியை பாலஸ்தீனம் மேற்கொண்டது.

இதை பரிந்துரைக்கும் வரைவு தீர்மானத்தின் மீது 15 உறுப்பினர்களை கொண்ட ஐ.நா பாதுகாப்பு கவுன்சிலில் வாக்கெடுப்பு நடந்தது. தீர்மானத்திற்கு ஆதரவாக 12 வாக்குகள் பதிவானது, சுவிட்சர்லாந்து, இங்கிலாந்து வாக்களிக்கவில்லை. இந்த தீர்மானத்தை அமெரிக்கா தனது வீட்டோ அதிகாரத்தை பயன்படுத்தி முறியடித்தது. தற்போது பாலஸ்தீனம் ஐ.நா.வில் உறுப்பினர் அல்லாத பார்வையாளர் நாடாக உள்ளது. ஐ.நா.வின் நடவடிக்கைகளில்பாலஸ்தீனம்பங்கேற்கமுடியும். ஆனால்தீர்மானங்களில் வாக்களிக்க முடியாது என்பது குறிப்பிடத்தக்கது.

## 'வாக்கு எண்ணும் மையங்களை 24 மணி நேரமும் கண்காணித்திடுக'... அதிமுகவினருக்கு எடப்பாடி அறிவுறுத்தல்

சென்னை, ஏப். 21

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:



அ.தி.மு.க. வேட்பாளர்கள், கூட்டணிக் கட்சிகளின் வேட்பாளர்கள், வேட்பாளர்களின் தனி முகவர்கள்; கழக உடன்பிறப்புகள் மற்றும் கூட்டணிக் கட்சிகளின் தொண்டர்களுக்கு அன்பு வேண்டுகோள்!

அ.தி.மு.க. 1972ம் ஆண்டு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆரால் தொடங்கப்பட்டது. இந்த இயக்கம் கண்ட முதல் வெற்றியே பாராளுமன்ற மக்களவையின் திண்டுக்கல் தொகுதிக்கு 1973ல் நடைபெற்ற இடைத்தேர்தல் வெற்றி தான் என்பது நமக்கெல்லாம் நன்கு நினைவில் இருக்கிறது.

இந்த இயக்கத்தின் பாராளுமன்ற வரலாற்றில் மிக அதிகபட்சமாக, மக்களவை, மாநிலங்களவை உட்பட 49 உறுப்பினர்களை, அம்மாவின் காலத்தில் பெற்றிருந்தது. இந்தியாவின் 3வது பெரிய கட்சி என்ற அங்கீகாரத்தோடு பாராளுமன்ற மக்களவையிலும், மாநிலங்கள் அவையிலும் சிறப்புடன் பணியாற்றியதோடு; அம்மாவை தொடர்ந்து, தமிழக மக்களின் நலனுக்காக முழு அர்ப்பணிப்புடன் பணியாற்றி வரும் இயக்கம் அ.தி.மு.க..

ஒற்றை உறுப்பினராக இருந்த ஆரம்ப காலத்திலும், 3வது பெரிய கட்சியாக இருந்த நேரத்திலும், அதனைத் தொடர்ந்தும், இந்திய தேசத்தின் ஒற்றுமைக்காகவும், நாட்டின் வளர்ச்சிக்காகவும், தமிழ்நாட்டின் உரிமைகளைப் பாதுகாத்திடவும், ஏழை, எளிய, உழைக்கும் மக்கள் மற்றும் நடுத்தர வருவாய் ஈட்டும் மக்களின் முன்னேற்றத்திற்காகவும் தொடர்ந்து பாராளுமன்றத்தில் குரல் கொடுத்து வரும் அ.தி.மு.க., அந்த சிறப்பான பணிகளைத் தொடர்ந்து நிறைவேற்றிட வேண்டும் என்ற உன்னத குறிக்கோளோடு; அராஜகத்திலும், வன்முறையிலும் கைதேர்ந்த தி.மு.க. மற்றும் பாரதிய ஜனதா கட்சியின் பல்வேறு முறைகேடுகளையும், தில்லுமுல்லுகளையும் தாண்டி, நேற்று தமிழகத்தில் சுமூகமான வாக்குப் பதிவு நடைபெறுவதற்கு முழு ஒத்துழைப்பு நல்கி தேர்தல் பணியாற்றிய தலைமைக் கழகச் செயலாளர்கள், மாவட்டக் கழகச் செயலாளர்கள், பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், முன்னாள் அமைச்சர்கள், முன்னாள் பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், கழக சார்பு அமைப்புகளின் துணை நிர்வாகிகள் மற்றும் கழகத்தில் பல்வேறு நிலைகளில் பணியாற்றி வரும் கழக நிர்வாகிகளுக்கும், கோடானுகோடி கழக உடன்பிறப்புகளுக்கும், முகவர்களுக்கும், அதேபோல், கூட்டணி மற்றும் தோழமைக் கட்சிகளின் தலைவர்களுக்கும், நிர்வாகிகளுக்கும், தொண்டர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். வாக்குப் பதிவு நிறைவு பெற்று, மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்கள் சம்பந்தப்பட்ட வாக்கு எண்ணும் மையங்களுக்குக் கொண்டுவந்து வைக்கப்பட்டுள்ள நிலையில், வருகிற ஜூன் மாதம் 4ந்தேதி அன்று வாக்கு எண்ணி முடிவுகள் அறிவிக்கும் வரையிலும்; கழக வேட்பாளர்களும், கூட்டணிக் கட்சிகளின் வேட்பாளர்களும்; கழகம் மற்றும் கூட்டணிக் கட்சிகளைச் சேர்ந்தநிர்வாகிகளும், முகவர்களும் கவனக்குறைவாக இருந்திடாமல், மின்னணு வாக்குப் பதிவு எந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள வாக்கு எண்ணும் மையங்களை மிகுந்த எச்சரிக்கையுடனும், விழிப்புணர்வுடனும் இரவு பகல் பாராமல் சுழற்சி முறையில் 24 மணி நேரமும் கண்காணித்திட வேண்டும் என்று வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன் என்றார்.




விழுப்புரம் (தனி) நாடாளுமன்ற தேர்தலில் வாக்குப்பதிவிற்கு பயன்படுத்தப்பட்ட மின்னணு வாக்குப்பதிவுஇயந்திரங்கள், சட்டமன்றதொகுதிகளிலிருந்துவாக்குஎண்ணும்மையமானவிழுப்புரம் அறிஞர் அண்ணா அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு அறையில் வைப்பதற்காக கொண்டு வந்து வைக்கப்பட்டுள்ளதை மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் பழனி நள்ளிரவில் நேரி ரில் பார்வையிட்டு, ஆய்வு செய்தார். உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தீபக் சிவாச், மாவட்ட வருவாய் அலுவலர் மு.பரமேஸ்வரி, கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) ஸ்ருதஞ்ஜெய் நாராயணன், திண்டிவனம் சார் ஆட்சியர் திவ்யான்ஷு நிகம், விழுப்புரம் வருவாய் கோட்டாட்சியர் காஜா சாகுல் ஹமீது, பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் பரிதி உட்பட பலர் உள்ளனர்.

# சிவகாசியில் பட்டாசு ஆலையில் எந்திரம் வெடித்து பயங்கர விபத்து: பெண் படுகாயம்

சிவகாசி, ஏப். 21

விருதுநகர் மாவட்டம் சிவகாசி நேஷனல் காலனியை சேர்ந்தவர் விக்னேஷ் (வயது47). இவருக்கு சொந்தமான கட்டிடத்தில் சந்தன மகாலிங்கம் என்பவர் பட்டாசு தயாரிக்க தேவையான அட்டைக் குழாய்களுக்கு யூ.வி. கோட்டிங் செய்யும் தொழிற்சாலை நடத்தி வருகின்றார். இங்கு வழக்கம் போல் நேற்று இரவில் வேலை நடைபெற்றது.

அப்போது தொழிலாளர்கள் அங்கு இருந்த ஹீட்டர் மிஷினை சுவிட்ச் ஆப் செய்யாமல் சென்று விட்டதாக கூறப்படுகிறது.

இந்நிலையில் பயங்கர சத்தத்துடன் வெடித்துள்ளது. இதில் அந்த தொழிற்சாலையின் கட்டிடம் இடிந்து தரை மட்டமானது.

இதனால் அதிர்ச்சி அடைந்த அப்பகுதியைச் சேர்ந்தவர்கள் உடனடியாக சிவகாசி தீயணைப்பு நிலையத்திற்கு தகவல் தெரிவித்தனர்.

சம்பவம் குறித்து தகவல் அறிந்த விரைந்து வந்த தீயணைப்பு துறையினர் இடர்பாடுகளில் வேறு யாரும் சிக்கி இருக்கிறார்களா என்று தேடிப் பார்த்தனர்.



இந்த சம்பவத்தின் போது பக்கத்து வீட்டைச் சேர்ந்த ராணி (35) என்கிற பெண்ணிற்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டது. உடனடியாக சிவகாசி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதித்தனர்.

# திம்பம் மலைப்பாதை வனப்பகுதியில் 2வது நாளாக பற்றி எரியும் காட்டுத்தீ



தாளவாடி, ஏப். 21

ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் புலிகள் காப்பகம் 1 லட்சத்து 4 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பை கொண்டுள்ளது. இங்கு தாளவாடி, ஆசனூர், தலமலை, ஜீர்கள்ளி, கேர்மாளம், கடம்பூர், டி.என். பாளையம், பவானிசாகர், சத்தியமங்கலம், விளாமூண்டி மொத்தம் 10 வனச்சரகங்கள் உள்ளன.

இங்கு யானைகள், சிறுத்தை, புலி, மான், காட்டெருமை, குரங்கு ஆகிய வனவிலங்குகள் வசித்து வருகின்றன.

இயற்கை எழில் கொஞ்சும் இந்த புலிகள் காப்பக பகுதிகள் தற்போது கடும் வறட்சி நிறைந்த பகுதியாக மாறி உள்ளது. வனப்பகுதியில் உள்ள மரம், செடி, கொடிகள் காய்ந்து காணப்படுகிறது.

இதனால் வன விலங்குகள் போதிய அளவு உணவு மற்றும் தண்ணீர் கிடைக்காமல் ஊருக்குள் புகுவது தொடர்கதை ஆகி வருகிறது. வன விலங்குகள் தண்ணீர் இருக்கும் பகுதியான மாயாறு பகுதிக்கு செல்ல தொடங்கி விட்டன.

இந்நிலையில் தலமலை வனச்சரகத்திக்கு உட்பட்ட திம்பம் மலைப் பாதை வனப்பகுதியில் நேற்று மாலை திடீரென காட்டுத் தீ ஏற்பட்டது. இந்த காட்டுத் தீயால் வனப்பகுதியில் உள்ள மரம், செடி, கொடிகள் பற்றி எரிந்து வருகிறது. பல அபூர்வ மூலிகை செடிகளும் எரிந்து நாசமானது.

அடர்ந்த வனப்பகுதி என்பதாலும், மலை உச்சியில் இருப்பதாலும் காட்டுத் தீயை கட்டுப்படுத்த முடியாமலும் சம்பவ இடத்துக்கு இடத்துக்கு செல்ல முடியாமல் வனத்துறையினர் திணறி வருகின்றனர்.

இந்த காட்டுத் தீயால் 100 ஏக்கர் பரப்பளவு உள்ள மரம், செடிகள், கொடிகள் எரிந்து நாசமாகி வருகின்றது. காட்டுத் தீயை கட்டுப்படுத்த மாற்று ஏற்பாடு செய்ய வேண்டும் என சமூக ஆர்வலர்கள் கோரிக்கை வைத்துள்ளனர்.

இந்நிலையில் இன்று 2வது நாளாக வனப்பகுதியில் காட்டுத் தீ கொழுந்து விட்டு எரிந்து வருகிறது. சம்பவ இடத்திற்கு இன்று வனத்துறையினர் சென்று தீயை அணைக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.

# வறண்டு காணப்படும் பவானிசாகர் நீர்த்தேக்க அணை பகுதி


ஈரோடு, ஏப். 21

ஈரோடு மாவட்ட மக்களின் முக்கிய குடிநீர் ஆதாரமாக உள்ளது பவானிசாகர் அணை. 105 அடி கொள்ளளவு கொண்ட பவானிசாகர் அணையின் முக்கிய நீர் பிடிப்பு பகுதியாக நீலகிரி மலைப்பகுதி உள்ளது.

பவானிசாகர் அணையின் மூலம் ஈரோடு, திருப்பூர், கரூர் மாவட்டங்களைச்சேர்ந்த 2 லட்சத்து 50 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலங்கள் பாசன வசதி பெற்று வருகின்றன.

இந் நி லை யி ல் நீர்ப்பிடிப்பு பகுதியான நீலகிரி மலைப்பகுதியில் கடந்த சில மாதங்களாகவே மழைப்பொழிவு இல்லாததால் அணைக்கு நீர்வரத்து குறைந்து வருகிறது.

அதேநேரம் அணைக்கு வரும் நீர்வரத்தை விட பாசனத்திற்கு அதிக அளவில் தண்ணீர் திறந்து விடப்பட்டு வருவதால் அணையின் நீர்மட்டமும்



தொடர்ந்து குறைந்து வருகிறது.

இன்று காலை நிலவரப்படி அணையின் நீர்மட்டம் 46.41 அடியாக குறைந்துள்ளது. கடந்த 2 மாதத்திற்கும் மேல் பவானிசாகர் அணைக்கு நீர்வரத்து 50 கன அடிக்கு கீழ் வ ரு வ து குறிப்பிடத்தக்கது.

கீழ்பவானி வாய்க்கால் பாசனத்திற்கு 5 கனஅடி த ண் ணீ ர் தி ற க் க ப் ப ட் டு ள் ள து . காளிங்கராயன் வாய்க்கால் பாசனம், தடப்பள்ளி அரக்கன் கோட்டை பாசனம் ஆகியவற்றுக்கு திறக்கப்பட்ட தண்ணீர் நிறுத்தப்பட்டுள்ளது. குடிநீருக்காக பவானி ஆற்றுக்கு தற்போது 200 கன அடி தண்ணீர் மட்டும் திறக்கப்பட்டு வருகிறது.

இதேபோல் 41.75 அடி கொள்ளளவு கொண்ட கு ண் டே ரி ப் ப ள் ள ம் அணையின் நீர்மட்டம் இன்றுகாலைநிலவரப்படி 28.46 அடியாக குறைந்து உள்ளது. 33 அடி கொள்ளளவு கொண்ட வரட்டுப் பள்ளம் அணையின் நீர் மட்டம் இன்று காலை நிலவரப்படி 22.01 அடியாக உள்ளது. அதே சமயம் 30.84 அடி கொள்ளளவு கொண்ட பெரும்பள்ளம்அணைக்கு கடந்த சில நாட்களாக நீர் வரத்து இன்றி அணை முழுமையாக வறண்டு விட்டது.

ஈரோடு மாவட்டத்தில் தொடர்ந்து அணைகளில் நீர்மட்டம் குறைந்து வருவதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். இதனால் குடிநீர் தட்டுப்பாடு அபாயம் ஏற்பட்டுள்ளது.

பவானிசாகர் அணை நீர் தேக்கப்பகுதியில் கடல் போல் காட்சி அளிக்கும் பகுதியில் தற்போது நீர் வறண்டு காட்சியளிக்கிறது. கடந்த 1995ம் ஆண்டு அணை வறண்டு காட்சியளித்தது. அதன் பிறகு தற்போது வறண்டு போய் உள்ளது. இதனால் டணாய்க்கன் கோட்டை முழுவதுமாக வெளியே தெரிகிறது.

# மகளின் ஆபாச வீடியோவை வெளியிடுவதாக கள்ளக்காதலன் மிரட்டினார் பெண் பரபரப்பு வாக்குமூலம்

பெங்களூரு, ஏப். 21

பெங்களூருவில் முதல் திருமணத்தை மறைத்து பழகியதுடன், மகளின் ஆபாச வீடியோவை வெளியிடுவதாக கள்ளக் காதலன் மிரட்டியதாக இரட்டை கொலையில் கைதான பெண்ணின்தாயிடம்நடந்தவிசாரணையில் தெரியவந்துள்ளது.

பெங்களூரு ஜே.பி.நகர் அருகே சாகாம்பரி நகரை சேர்ந்தவர் கீதா. இவரது மகள் அனுஷா (வயது 25). இவருக்கும் கொரகுன்டே பாளையாவை சேர்ந்த சுரேசுக்கும் கடந்த 5 ஆண்டுக்கு முன்பு பழக்கம் ஏற்பட்டு காதலாக மாறி இருந்தது. சுரேசுக்கு திருமணமாகி 2 குழந்தைகள் இருந்தும் அனுஷாவுடன் கள்ளத்தொடர்பு வைத்திருந்தார். இதற்கிடையில், சுரேசுடன் உள்ள தொடர்பைதுண்டித்ததால் நேற்று முன்தினம் சாரக்கி பூங்காவில் வைத்து அனுஷாவை கத்தியால் குத்தி சுரேஷ் கொலை செய்தார்.



தனது மகளை காப்பாற்றுவதற்காக கீதா, சுரேசின் தலையில் கல்லால் தாக்கினார். இதில் சுரேசும் உயிரிழந்தார். இதுகுறித்து ஜே.பி.நகர் போலீசார் வழக்குப்பதிவு செய்து கீதாவை கைது செய்து விசாரித்தனர். கீதா அளித்துள்ள வாக்குமூலம் குறித்து போலீசார் கூறியதாவது:

பெங்களூருவில் விழா ஏற்பாடுகளை (ஈவன்ட் மேனேஜ்மென்ட்) செய்யும் ஒரு நிறுவனத்தில் சுரேஷ் வேலை செய்து வந்தார். அப்போது தான் அனுஷாவுடன் அவருக்கு பழக்கம் ஏற்பட்டு கள்ளத்தொடர்பாக மாறி இருந்தது. தனக்கு திருமணமாகி 2 குழந்தைகள் இருப்பதை மறைத்து அனுஷாவுடன் சுரேஷ் பழகி உள்ளார். இதுபற்றி அனுஷாவுக்கு தெரியவந்ததும் சுரேசுடன் பழகுவதை நிறுத்தியுள்ளார். இதையடுத்து, அனுஷாவின் ஆபாச வீடியோவை வெளியிடுவதாக சுரேஷ் மிரட்டியுள்ளார். இது பற்றி சுரேசின் மனைவியிடம் அனுஷாவும், கீதாவும் கூறியுள்ளனர். இதனால் 2 குடும்பத்தினர் இடையே பிரச்சினையும் ஏற்பட்டது.

அத்துடன் ஆர்.எம்.சி. யார்டு போலீஸ் நிலையத்தில் சுரேஷ் மீது அவர்கள் புகார் அளித்திருந்தனர். அங்கு நடந்த சமாதான பேச்சில் அனுஷாவுடன் பழக மாட்டேன், மிரட்ட மாட்டேன் என்று சுரேசிடம் எழுதி வாங்கி விட்டு, அவரை எச்சரித்து போலீசார் அனுப்பி வைத்திருந்தார்கள். தன்னை விட்டு பிரிந்து விட்டதால் ஆத்திரமடைந்த சுரேஷ் கடைசியாக ஒரு முறை பேச வேண்டும் என்று சாரக்கி பூங்காவுக்கு அழைத்து கொலை செய்ததும், சுரேசை கீதா கல்லால் தாக்கி கொன்றுள்ளார். விசாரணைக்கு பின்பு கீதாவும் கோர்ட்டில் ஆஜர்படுத்தப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளதாக ஜே.பி.நகர் போலீசார் தெரிவித்துள்ளனர்.

# கர்நாடக துணை முதல்வரை மு.க.ஸ்டாலின் கண்டிக்காதது ஏன்? அன்புமணி ராமதாஸ் கேள்வி

சென்னை, ஏப். 21

பா.ம.க. தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:



காவிரி ஆற்றின்குறுக்கே மேகதாது அணையை நல்ல வழியிலோ, மோசடி செய்தோ கட்டியே தீருவோம்; அதன் மூலம் பெங்களூரு நகரத்திற்கு காவிரி நீரை வழங்குவோம் என்று கர்நாடக து ணை முதல்அமைச்சரும், அம் மாநில காங்கிரஸ் தலைவருமான டி.கே.சிவக்குமார் கூறியிருக்கிறார். ஆனால், அதைக் கண்டிக்கக் கூட முன்வராமல் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அமைதி காப்பது, காங்கிரஸ் கூட்டணிக்காக தமிழ் நாட்டின் காவிரி ஆற்று உரிமையைஅடகுவைத்து விட்டாரோஎன்றஐயத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

மேகதாது அணையை கட்டியே தீருவோம் என்று கர்நாடக முதல்அமைச்சர் சி த் த ரா மை ய ா வு ம் , துணை முதல்அமைச்சர் டி . கே . சி வ க் கு மா ரு ம் மாறி மாறி கூறி வருகின்றனர். இது கூட்டாட்சி தத்துவத்திற்கு எதிரானது மட்டுமின்றி, தமிழ்நாட்டிற்கும், கர்நாடகத்திற்கும் இடையிலான நல்லுறவுக்கு வேட்டு வைக்கும் செயலாகும். இதை தமிழர்களால் சகித்துக்கொள்ள முடியாது.

கர்நாடக முதல் அமைச்சர் மற்றும் துணை முதலமைச்சரின் பேச்சுகள் தமிழ்நாட்டின் நலனுக்கு எதிரானவை என்பது தமிழகத்தின் கடைக்கோடியில் இருக்கும் விவசாயிக்குக் கூட தெரிகிறது. ஆனால், தமிழ்நாட்டின் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு இது குறித்து எதுவுமே தெரியாதது தான் வியப்பாகவும், வேதனையாகவும் இருக்கிறது. உலகில் நடக்கும் சாதாரண நிகழ்வுகளுக்கு எல்லாம் கருத்து தெரிவிக்கும் அவர், தமிழ்நாட்டுக்கு காவிரியில் தண்ணீர் வராமல் தடுக்கும் வகையில் மேகதாது அணையை கட்டுவோம் என்று கர்நாடக முதல்அமைச்சரும், துணைமுதல்அமைச்சரும் தொடர்ந்து கூறி வரும் நிலையில், அதுகுறித்து எதுவுமே கருத்து தெரிவிக்காமல் இருப்பதன் மர்மம் என்னவென்று தெரியவில்லை.

எப்போதெல்லாம் மத்தியில் காங்கிரஸ் ஆட்சியில் இருக்கிறதோ, எப்போதெல்லாம் காங்கிரஸ் கட்சியுடன் கூட்டணியில் இருக்கிறதோ, அப்போதெல்லாம் தமிழ்நாட்டின் காவிரி உரிமைகளை கர்நாடகத்திற்கு தாரை வார்ப்பது தி.மு.க.வின் வழக்கம். இப்போதும் காங்கிரஸ் கட்சியுடனான உறவுக்காக மேகதாது அணை கட்டும் விவகாரத்தில் தமிழ்நாட்டின் உரிமைகளை தி.மு.க. அரசு அடகு வைத்து விடக்கூடாது.

காவிரி ஆற்றின்குறுக்கே மேகதாது அணை கட்டப்பட்டால், அதன்பிறகு காவிரி பாசன மாவட்டங்கள் பாலைவனமாகி விடும். அதை உணர்ந்து மேகதாது விவகாரத்தில் தமிழ்நாட்டின் உரிமைகளைக் காக்க வேண்டும். நல்ல வழியிலோ, மோசடி வழியிலோ மேகதாது அணையை கட்டியே தீருவோம் என்று கூறி வரும் கர்நாடக காங்கிரஸ் தலைவர் டி.கே.சிவக்குமார், முதல்அமைச்சர் சித்தராமையா ஆகியோரை தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடுமையாக கண்டிக்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# 5 டிகிரி வரை வெப்பநிலை அதிகரிக்க வாய்ப்பு: வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை

சென்னை, ஏப். 21

தமிழகத்தில் கோடை வெயில் வாட்டி எடுத்து வருகிறது. பகல் நேரங்களில் வெளியில் தலை காட்ட முடியாத அளவுக்கு வெயிலின் தாக்கம் அதிகமாகவே உள்ளது.

மோட்டார் சைக்கிளில் செல்பவர்கள் வியர்வை மழையில் நனைந்தபடியே கொளுத்தும் வெயிலில் பயணம் செய்ய வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். இப்படி பகலில்அதிகரித்துகாணப்படும் வெயிலால் இரவு நேரத்திலும் புழுக்கம் அதிகரித்து அனல் காற்றே வீசுகிறது.

இந்நிலையில்சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

வட தமிழக உள் மாவட்டங்களின் ஒரு சில இடங்களில், அடுத்த 24 மணி நேரத்திற்கு அதிகபட்ச வெப்பநிலை 35 செல்சியஸ் வரை இயல்பை விட அதிகரிக்க வாய்ப்புள்ளது.

ஏப்.21ந்தேதி முதல் ஏப்.24ந்தேதி வரை அதிகபட்ச வெப்பநிலை சற்றே குறைந்து ஒருசில இடங்களில் இயல்பை விட 23 டிகிரி செல்சியஸ் அதிகமாக இருக்கக்கூடும்.

ஏப்.24ந்தேதி வரை காற்றின் ஈரப்பதம் தமிழக உள் மாவட்டங்களின் சமவெளி பகுதிகளில் பிற்பகலில் 3050% ஆக இருக்கக் கூடும்.

மற்ற நேரங்களில் 40 75% ஆகவும், கடலோரப் பகுதிகளில் 5080% ஆகவும் இருக்கக்கூடும். அதிக வெப்பநிலை, அதிக ஈரப்பதம் இருக்கும்பொழுது ஓரிரு இடங்களில் அசவுகரியம் ஏற்படலாம்.

தமிழக பகுதிகளின் மேல் நிலவும் வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக ஏப்.23 வரை மழைக்கு வாய்ப்பு உள்ளது.

மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள், அதனை ஒட்டிய மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும்.

அடுத்த 48 மணி நேரத்திற்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 3738 டிகிரி செல்சியசை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 2728 டிகிரி செல்சியசை ஒட்டியும் இருக்கக் கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 3 நாட்களுக்கு பிறகு திறப்பு இன்று விடுமுறை: டாஸ்மாக் கடைகளில் அலைமோதிய கூட்டம்

வேலூர், ஏப். 21

வேலூரில் பாராளுமன்ற தேர்தலையொட்டி கடந்த 17ந்தேதி முதல் 19ந்தேதி வரை 3 நாட்கள் டாஸ்மாக் கடைக்கு விடுமுறை அளிக்கப்பட்டது.



இதனைத் தொடர்ந்து இன்றுயும் மகாவீர் ஜெயந்தியை முன்னிட்டு டாஸ்மாக் விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது. இன்று டாஸ்மாக் கடைகளில் கூட்டம் அலைமோதியது.

அனைத்து மதுபான க டை க ளி லு ம் குடிமகன்கள் மது குடிப்பதற்காக குவிந்தனர். பலர் கூடுதல் மதுபாட்டில்களை வாங்கி வயிறு முட்ட குடித்தனர். மேலும் பலர் நன்றாக மது குடித்துவிட்டு தங்களது தேவைக்காக மதுபாட்டில்களை வாங்கிச் சென்றனர். பல்வேறு இடங்களில் கூட்டம் கூட்டமாக வந்து மது வகைகளை வாங்கிச் சென்றனர்.

தேவையான மதுபாட்டில்களை வாங்கி இருப்பு வைக்க மது பிரியர்கள் ஆர்வம் காட்டினர்.

ஆனால் டாஸ்மாக் கடைகளில் இன்று குவிந்த மது பிரியர்கள் தங்களுக்கு தேவையான மது பாட்டில்களை வாங்கி குவித்து மொத்தமாக மறைத்து அள்ளிச் சென்றுள்ளனர்.

இது போன்று வாங்கிச் சென்ற மதுபாட்டில்களை திருட்டுத்தனமாக கூடுதல் விலைக்கும் அவர்கள் விற்பனை செய்ய வாய்ப்பு உள்ளது. இதைத் தொடர்ந்து அதுபோன்ற மது விற்பனையை தடுப்பதற்கு போலீசார் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு வருகிறார்கள்.

இன்று ஒரே நாளில் மட்டும் வழக்கமான விற்பனையை விட கூடுதலாக மது விற்பனை நடந்தது. இதனால் டாஸ்மாக் கடைகளில் கூட்டம் குவிந்து விற்பனை களைகட்டியது.

# வாக்குச்சாவடியில் பெண் தன்னார்வலர் மயங்கி விழுந்து உயிரிழப்பு



ராமநாதபுரம்: ஏப். 11

ராமநாதபுரம் மாவட்டம் மண்டபம் அடுத்த கு ஞ் சா ர் வ ல ை ச பகுதியைச் சேர்ந்தவர் சாந்தி.

இவருக்கும் அதே பகுதியைச் சேர்ந்த சங்கர் என்பவருக்கும் கடந்த சில ஆண்டுகளுக்கு முன் திருமணமாகி 10 மற்றும் 11 வயதில் 2 பெண் குழந்தைகள் உள்ளனர்.

கடந்த 2 ஆண்டுகளுக்கு முன் மீன்பிடி தொழிலுக்காக வெளிநாட்டிற்கு சென்ற சங்கர் கடலில் தவறி விழுந்து உயிரிழந்தார். இதனையடுத்து தனது மகள்களுடன் குஞ்சார்வலசையில் சாந்தி தனியாக வசித்து வந்தார்.

இந்நிலையில் நேற்று நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலுக்காக வேதாளை அரசு மேல் நிலைப்பள்ளியில் தேர்தல் பணிகள் உதவிக்காக ஊராட்சி மன்றம் சார்பில் சாந்தி தன்னார்வலராக நியமிக்கப்பட்டு நேற்று காலை 6 மணி முதல் மாலை 5.30மணிவரைதொடர்ந்து வேதாளை அரசு மேல்நிலைப் பள்ளியில் உள்ள வாக்கு பதிவு மையம் ஒன்றில் பணி செய்து வந்தார்.

இந்நிலையில் மாலை 6 மணிக்கு தேர்தல் முடிவடைய இருந்த நிலையில் தனது வாக்கை பதிவு செய்வதற்காக அதே பள்ளியில் உள்ள மற்றொரு வாக்குப் பதிவு மையத்தில் தனது வாக்கை பதிவு செய்து விட்டுஅறைக்குவெளியே வந்தபோது சாந்தி திடீரென மயங்கி கீழே விழுந்தார்.

இதனையடுத்து வாக்குச்சாவடி மையத்தில் இருந்த மருத்துவர்கள் சாந்தியை பரிசோதனை செய்து பார்த்தபோது சாந்தி உயிரிழந்தது தெரிய வந்தது.

இதனையடுத்துஉடலை கைப்பற்றிய மண்டபம் போலீசார் பிரேத பரிசோதனைக்காக ராமநாதபுரம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதித்துள்ளனர்.

கணவரை இழந்து தனியாக தனது குழந்தைகளுடன்வாழ்ந்து உயிரிழந்ததால் குழந்தைகளின் எதிர்காலம் கேள்வி குறியாகி உள்ளது.

எனவே குழந்தைகளுக்கு அரசு உதவி வழங்கி வேலை வழங்க வேண்டும் என உறவினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# கள்ள ஓட்டு போட்டதாக வாலிபர் மீது வழக்கு

இரணியல், ஏப். 21

இரணியல் அருகே உள்ள கட்டிமாங்கோடு என்ற இடத்தைச் சேர்ந்தவர் இளையராஜா என்ற கணேஷ் ராஜா. இவர் நேற்று மதியம் கட்டிமாங்காடு அரசு நடுநிலைப் பள்ளி வாக்குச்சாவடிக்கு வாக்களிக்கச் சென்றார். வரிசையில் அவருக்கு பின்னால் அதே பகுதியைச் சேர்ந்த அரவிந்த் என்பவர் நின்றார். வாக்குச்சாவடிக்குள் சென்றதும் கணேஷ் ராஜா வாக்கு சீட்டை சரி பார்த்த அதிகாரிகள் அவரை வாக்களிக்க அனுமதித்தனர். அவர் மின்னணு எந்திரத்தில் வாக்களித்து திரும்பும் போது, அரவிந்தும் அங்கு வந்தார். அவர் மின்னணு வாக்குப் பதிவு எந்திரத்தில் வாக்கினை செலுத்துவதற்குள் அங்கு நின்றிருந்த கணேஷ் ராஜா மின்னணு வாக்குப் பதிவு எந்திரத்தில் பட்டனை அழுத்தி விட்டாராம். பீப் சவுண்ட் கேட்டதால் அதிர்ச்சி அடைந்த அரவிந்த் இது குறித்து வாக்குச் சாவடி அதிகாரிகளிடம் புகார் தெரிவித்தார். அதற்குள் கணேஷ் ராஜா அங்கிருந்து நைசாக வெளியேறி விட்டார்.

இது குறித்த தகவல் அறிந்ததும் அப்பகுதி மக்கள் மற்றும் அரசியல் கட்சியினர் அங்கு குவிந்தனர். இதனால் அங்கு பதட்டம் ஏற்பட்டது. இந்த தகவல் உயர் அதிகாரிகளுக்கும் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து அங்கு அதிரடிப்படையினர் குவிக்கப்பட்டனர்.

மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு சுந்தரவதனம் உள்ளிட்ட அதிகாரிகள் சம்பவ இடம் சென்று விசாரணை நடத்தினர். இது தொடர்பாக தேர்தல் நடத்தும் அதிகாரி கொடுத்த புகாரின் பேரில் கணேஷ் ராஜா மீது இரணியல் போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# திருவேற்காடு கோவிலில் ரீல்ஸ் வீடியோ எடுத்த பெண் பணியாளர்கள் பக்தர்கள் கடும் கண்டனம்

பூந்தமல்லி, ஏப்.21



திருவேற்காடு தேவி கருமாரியம்மன் கோவில் பிரசித்தி பெற்ற அம்மன் தலங்களில் ஒன்றாகும். இந்த கோவிலுக்கு தமிழகம் மட்டுமின்றி ஆந்திரா, கர்நாடகா, புதுச்சேரி உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களில் இருந்தும் ஏராளமான பக்தர்கள் தினமும் வருகின்றனர். அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் உள்ள இந்த கோவிலில் தற்போது கும்பாபிஷேகம் செய்வதற்காக பாலாலயம் செய்யப்பட்டு திருப்பணிகள் நடைபெற்று வருகிறது.

இந்நிலையில் திருவேற்காடு தேவி கருமாரி அம்மன் கோவில் வளாகத்துக்குள் பெண் பணியாளர்கள் ஒன்று சேர்ந்து கருமாரி அம்மன் படத்திற்கு கீழே நாற்காலி போட்டு அமர்ந்துகொண்டு சமூக வலைத்தளங்களில் வரும் மீம்ஸ் ரீல்ஸ் போல வடிவேலு நடித்த படத்தின் காமெடி காட்சிக்கு நடித்துள்ளனர். அங்கிருந்த பக்தர்கள் வேடிக்கை பார்த்ததை கூட அவர்கள் பொருட்படுத்தாமல், நடிகர் வடிவேலு, கோவிலில் தான் பார்த்த வேலையை ராஜினாமா செய்வதுபோல் வசனம் பேசி கோவில் பணியாளர்கள் நடித்தனர்.

மேலும் அதே கோவில் வளாகத்தில் மற்றொரு வீடியோவில் 'இது போல சொந்தம் தந்ததால், இறைவா வா நன்றி சொல்கிறோம், உனக்கேனும் சோகம் தோன்றினால், இங்கே வா இன்பம் தருகிறோம்' என்ற பாடலுக்கு கோவில் பணியாளர்கள் நடனம் ஆடியுள்ளனர். கோவில் வளாகத்திற்குள் கருவறை அருகே இத்தகைய காட்சிகளில் நடித்துள்ளனர்.

இந்த 2 வீடியோக்களும் தற்போது சமூக வலைதளங்களில் வேகமாக பரவி வைரல் ஆகி வருகிறது. இந்த வீடியோக்களை பார்க்கும் பக்தர்களும், பொதுமக்களும் அவர்களுக்கு கடும் கண்டனங்களை தெரிவித்து வருகிறார்கள். பக்தர்கள் புனிதமாக கருதும் திருவேற்காடு தேவி கருமாரியம்மன் கோவில் கருவறைஅருகேஇதுபோன்ற அநாகரிகமாக நடந்து கொண்ட இவர்கள் மீது அறநிலையத்துறையும், அரசும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பக்தர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# சென்னையில் 3 வாக்கு எண்ணும் மையங்களிலும் 540 கேமராக்கள் மூலம் கண்காணிப்பு

சென்னை, ஏப். 21



தென்சென்னை தொகுதியில் பதிவாகியுள்ள வாக்குகள் அண்ணா பல்கலைக்கழகத்திலும், மத்திய சென்னை வாக்குகள் லயோலா கல்லூரியிலும், வடசென்னை தொகுதி வாக்குகள் ராணிமேரி கல்லூரியிலும் எண்ணப்படுகின்றன. இந்த 3 மையங்களிலும் 4 அடுக்கு பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

ராணிமேரி கல்லூரியில் 172 கேமராக்கள் பொறுத்தப்பட்டுள்ளன.

அண்ணா பல்கலைக்கழகத்தில் 180 கேமராக்களும், லயோலா கல்லூரியில் 188 கேமராக்களும் பொறுத்தப்பட்டுள்ளன. இந்த கேமராக்கள் மூலமாக போலீசார் 24 மணி நேரமும் கண்காணித்து வருகிறார்கள்.

# கேரளாவில் பறவை காய்ச்சல் பாதிப்பு எதிரொலி: 12 சோதனைச்சாவடிகளில் கண்காணிப்பு

கோவை, ஏப். 21



கேரள மாநிலம் ஆலப்புழா மாவட்டத்தில் எடத்வா மற்றும் செருதளா கிராமங்களில் உள்ள சில கோழி பண்ணைகளில் வாத்துகள் அடுத்தடுத்து இறந்தது. இறந்த வாத்துகளை ஆய்வு செய்ததில் எச்5என்1 என்ற பறவை காய்ச்சல் இருப்பது உறுதியானது.

இதையடுத்து கேரள மாநிலத்தில் பறவை காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கேரளாவில் பறவை காய்ச்சல் பரவியுள்ளதால், தமிழக எல்லைப்பகுதியில் கண்காணிப்பு பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

அதன்படி தமிழக கேரள எல்லைப்பகுதிகளான ஆனைகட்டி, வாளையாறு, வேலந்தாவளம், மேல்பாவி, முள்ளி, மீனாட்சிபுரம், கோபாலபுரம், செம்மனாம்பதி, வீரப்ப கவுண்டன்புதூர், நடுப்புணி, ஜமீன் காளியாபுரம், வடக்காடு உள்ளிட்ட 12 சோதனை சாவடிகளில் சிறப்பு கால்நடை பராமரிப்புத்துறையின் குழுவினர் 24 மணி நேரமும் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இவர்கள் கேரளாவில் இருந்து தமிழகத்திற்குள் நுழையும் வாகனங்களில் கோழி தொடர்பான பொருட்கள் கொண்டு வரப்படுகிறதா? என்பதை கண்காணித்து வாகனங்களில் கிருமி நாசினி தெளிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

கேரள மாநிலம் ஆலப்புழாவில் வாத்துகளுக்கு பறவை காய்ச்சல் பாதிப்பு கண்டறியப்பட்டுள்ளது.

இதையடுத்து தமிழக, கேரள எல்லையான வாளையார் உள்பட 12 சோதனை சாவடிகளிலும் சிறப்பு கால்நடை குழுவினர் மூலம் கண்காணிப்பு பணி மேற்கொள்ளப்படுகிறது.

இந்த குழுவில் ஒரு கால்நடை மருத்துவர், ஒரு கால்நடை ஆய்வாளர், 2 கால்நடை பராமரிப்பு உதவியாளர்கள் உள்ளனர்.

கேரளாவில் இருந்து கோவைக்கு கொண்டு வரப்படும் கறிக்கோழிகள், கோழிகளின் எரு, கோழி முட்டைகள், கோழிக்குஞ்சுகள், வாத்துகள், வாத்து முட்டைகள் உள்ளிட்ட பறவைகள் தொடர்பாக பொருட்களை கொண்டு வரும் வாகனங்களை எல்லையிலேயே நிறுத்தி கேரளாவுக்கு திருப்பி அனுப்ப உத்தரவிடப்பட்டுள்ளது.

கேரளாவில் இருந்து கோவை மாவட்டத்திற்கு வரும் வாகனங்களில் கிருமி நாசினி தெளிக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தவிர மாவட்டத்தில் 1252 கோழிப்பண்ணைகள் உள்ளது. இந்த பண்ணைகளில் பறவை காய்ச்சல் பாதிப்பு தொடர்பாக கண்காணித்து வருகிறோம்.

மேலும் பண்ணைகளில் திடீர் கோழி உயிரிழப்புகள், பறவை காய்ச்சல் அறிகுறிகள் இருந்தால் உடனடியாக கால்நடை துறையினருக்கு தகவல் அளிக்க வேண்டும் என உரிமையாளர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீர் நிலைகளில் உள்ள பறவைகளின் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு வருகிறது.

தவிர கோழிப்பண்ணைகளில் பறவை காய்ச்சல் பாதிப்பு உள்ளதா? என்பதை கண்டறிய 432 மாதிரிகள் எடுத்து ஆய்வு நடத்தப்பட்டது. இதில் பறவை காய்ச்சல் அறிகுறிகள் தென்படவில்லை.

இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

# ஓட்டுபோட சொந்த ஊர் சென்றவர்கள் சென்னை திரும்ப சிறப்பு பஸ், ரெயில்கள் இயக்கப்படுகிறது

சென்னை, ஏப். 21



பாராளுமன்ற தேர்தலில் அனைவரும் வாக்களிக்க வேண்டும் என்பதற்காக நேற்று அரசு பொது விடுமுறை அறிவித்து இருந்தது. தனியார் நிறுவனங்களும் ஊழியர்களுக்கு கட்டாயம்விடுப்புஅளிக்க வேண்டும் என்று அறிவுறுத்தி இருந்தததால் சொந்த ஊர்களுக்கு 17, 18 ஆகிய தேதிகளில் புறப்பட்டு சென்றனர்.

சென்னை மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளில் தங்கி வேலை செய்து வந்த கூலி தொழிலாளர்கள், ஊழியர்கள் ஓட்டு போடுவதற்காக சொந்த ஊர்களுக்கு புறப்பட்டனர். இதற்காக அரசு சிறப்பு பஸ்கள் இயக்கின. தெற்கு ரெயில்வே சிறப்பு ரெயில்களை சென்னையில் இருந்து பல்வேறு பகுதிகளுக்கு இயக்கியது.

இந்த நிலையில் ஓட்டு போட சொந்த ஊர் சென்றவர்கள் சென்னை திரும்ப வசதியாக கூடுதலாக பஸ் வசதியை அரசு போக்குவரத்து கழகங்கள் இன்று (சனிக்கிழமை) முதல் செய்துள்ளது. அரசு ஊழியர்கள், பொதுத்துறை நிறுவனங்களுக்கு சனி, ஞாயிறு தொடர் விடுமுறை கிடைப்பதால் 22ந்தேதி (திங்கட்கிழமை) வேலைக்கு செல்ல வசதியாக பெரும்பாலும் நாளை பயணத்தை தொடர்வார்கள்.

அதனால் நெல்லை, தூத்துக்குடி, கன்னியாகுமரி, மதுரை, திருச்சி, தஞ்சாவூர், கோவை, சேலம், ஓசூர்,திருப்பூர்,சிதம்பரம், வேலூர், திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, விழுப்புரம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இருந்து சென்னைக்கு கூடுதலாக பஸ்கள் விடப்பட்டுள்ளது.

வழக்கமாக இயக்கப்படும் பஸ்களை விட பிற பகுதிகளிலும் சிறப்பு பஸ்கள் நாளை பிற்பகல் முதல் இயக்கப்பட உள்ளன.

தூத்துக்குடியில் இருந்து சென்னை எழும்பூருக்கு முன்பதிவு இல்லாத சிறப்புரெயில்விடப்பட்டு உள்ளது. இந்த ரெயில் தூத்துக்குடியில் இன்று மாலை 4.30 மணிக்கு புறப்பட்டு எழும்பூருக்கு நாளை அதிகாலை 3.50 மணிக்கு வந்து சேருகிறது. பின்னர் 4.45 மணிக்கு சென்ட்ரல் நிலையம் சென்றடைகிறது.

இந்த சிறப்பு ரெயிலில் உள்ள அனைத்து பெட்டிகளும் முன்பதிவு செய்யப்படாதவை. இந்த ரெயில் மதுரை, திருச்சி, விருத்தாசலம், விழுப்புரம் வழியாக இயக்கப்படுகிறது.

மற்றொரு சிறப்பு ரெயில் திருச்சியில் இருந்து எழும்பூருக்கு இயக்கப்பட்டது. அதிகாலை 5.30 மணிக்கு புறப்பட்ட ரெயில் பகல் 1.20 மணிக்கு எழும்பூர் வந்து சேர்ந்தது.

இதே போல் தாம்பரத்தில் இருந்து திருநெல்வேலிக்கு இன்று சிறப்பு ரெயில் இயக்கப்படுகிறது. இந்த ரெயில் தாம்பரத்தில் இரவு 7.50 மணிக்கு புறப்பட்டு நாளை காலை 11.15 மணிக்கு திருநெல்வேலி சென்றடைகிறது.

மறுமார்க்கத்தில் திருநெல்வேலியில் இருந்து நாளைபகல் 3.15 மணிக்கு புறப்பட்டு மறுநாள் அதிகாலை 4.55 மணிக்கு தாம்பரம் வந்து சேருகிறது. சிறப்பு ரெயில்களை பொதுமக்கள் பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இது குறித்து அரசு விரைவு போக்குவரத்து கழக மேலாண்மை இயக்குனர் கூறும்போது நாளை (ஞாயிற்றுக்கிழமை) பயணம் செய்ய 34 ஆயிரம் பேர் முன்பதிவு செய்துள்ளனர். மொத்தம் 1.25 லட்சம் இடங்கள் உள்ளன. பொதுமக்கள் நெரிசலை தவிர்க்க அரசு பஸ்களில் முன்பதிவு செய்து பயணிக்கலாம் என்றார்.

# மின்னணு எந்திரங்களுக்கு 4 அடுக்கு பாதுகாப்பு கேமராக்கள் மூலம் 24 மணி நேரமும் கண்காணிப்பு

சென்னை, ஏப். 21




தமிழகத்தில் 39 பாராளுமன்ற தொகுதிகளிலும் அமைதியான முறையில் தேர்தல் நடந்து முடிந்து உள்ளது.

சின்ன சின்ன அசம்பாவித சம்பவங்கள் மட்டுமே நடைபெற்ற நிலையில் பெரிய அளவில் வன்முறை சம்பவங்களோ, மோதலோ ஏற்படவில்லை. நேற்று காலை 7 மணிக்கு தொடங்கிய வாக்குப்பதிவு மாலையில் நிறைவடைந்ததை தொடர்ந்து வாக்குப்பதிவு எந்திரங்கள் அனைத்தும் பூட்டி சீல் வைக்கப்பட்டன.

39 பாராளுமன்ற தொகுதிகளிலும் பதிவான ஓட்டுகள் ஜூன் 4ந்தேதி எண்ணப்படுகிறது. நேற்று மாலையில் வாக்குப்பதிவு முடிவடைந்த பிறகு அனைத்து மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்களும் பலத்த பாதுகாப்புடன் வாக்கு எண்ணும் மையங்களுக்கு வாகனங்களில் எடுத்துச்செல்லப்பட்டன.

மாலை 6 மணிக்கு பிறகு வரிசையில் நின்றவர்கள் டோக்கன் வாங்கிக் கொண்டு நீண்ட நேரம் காத்திருந்து ஓட்டு போட்டனர். இதனால் சில மையங்களில் இரவு 7 மணி வரையிலும் வாக்குப்பதிவு நடைபெற்றது. அதன் பிறகே பல வாக்குச்சாவடிகளில் இருந்து மின்னணு எந்திரங்கள் எடுத்துச் செல்லப்பட்டன.

சென்னையில் அண்ணா பல்கலைக்கழகம், ராணி மேரி கல்லூரி, லயோலா கல்லூரி ஆகிய 3 மையங்களில் வாக்குகள் எண்ணப்படுகின்றன. இதே போன்று 39 தொகுதிகளில் பதிவான வாக்குகளும் அந்தந்த தொகுதிக்குட்பட்ட மையங்களில் எண்ணப்படுகிறது.

தேர்தல் முடிந்து 45 நாட்கள்கழித்தே ஜூன் 4ந்தேதி வாக்குகள் எண்ணப்படுவதால் மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்களை ஒரு மாதத்துக்கும் மேலாக பாதுகாக்க வேண்டிய கட்டாயம் காவல்துறையினருக்கு ஏற்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து வாக்கு எண்ணும் மையங்களில் 4 அடுக்கு பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

முதல் அடுக்கில் துணை ராணுவத்தினர் துப்பாக்கி ஏந்தியபடி பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். இரண்டாவதாகதமிழ்நாடு சிறப்பு போலீஸ் படையினரும், 3வதாக ஆயுதப்படை போலீசும், 4வதாக உள்ளூர் போலீசாரும் பாதுகாப்பு பணிகளை கவனித்து வருகிறார்கள்.

டி.எஸ்.பி. அல்லது போலீஸ் இன்ஸ்பெக்டர் அந்தஸ்திலான அதிகாரிகள் தலைமையில் உள்ளூர் போலீசார் பாதுகாப்பு ஏற்பாடுகளை கவனித்து வருகிறார்கள்.

39 பாராளுமன்ற தொகுதிகளிலும் பயன்படுத்தப்பட்ட மின்னணு எந்திரங்களை வாக்கு எண்ணும் மையங்களுக்கு கொண்டு செல்லும் பணிகள் நேற்று இரவு விடிய விடிய நடைபெற்றது. இன்று காலையிலும் பல இடங்களில் அந்த பணிகள் நீடித்தன.

வாக்கு எண்ணும் மையங்களுக்கு இன்று காலையில் கொண்டு சேர்க்கப்பட்ட மின்னணு எந்திரங்கள் 'ஸ்டிராங் ரூம்' என்று அழைக்கப்படும் அறைகளில் வரிசையாக அடுக்கி வைக்கப்பட்டன. பின்னர் அந்த அறைகள் பூட்டி சீல் வைக்கப்பட்டன.

இந்த அறையின் முன்பு துப்பாக்கி ஏந்திய துணை ராணுவ படையினர் பாதுகாப்புக்காகநிறுத்தப்பட்டு உள்ளனர்.

ஸ்டிராங் ரூம் அறையை சுற்றிலும் போலீசார் ரோந்து சுற்றி வரும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது. இதை தாண்டி மின்னணு எந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள அறைக்கு அருகில் யாரும் நெருங்க முடியாது என்று போலீஸ் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

வாக்கு எண்ணும் மையங்கள் அனைத்திலும் நூற்றுக்கணக்கான கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டு தீவிரமாக கண்காணிக்கப்பட்டு வருகிறது. இந்த கேமராக்களில் பதிவாகும் காட்சிகளை 24 மணி நேரமும் கண்காணிக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதற்காக வாக்கு எண்ணும் மையங்களில் சிறப்பு கட்டுப்பாட்டு அறைகள் அமைக்கப்பட்டுள்ளன. அங்கிருந்தபடியே போலீசார் கண்காணித்து வருகிறார்கள்.

இப்படி வாக்கு எண்ணும் மையங்களில் உச்சக்கட்ட போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டு 10 ஆயிரம் போலீசார் கண்காணித்து வருகிறார்கள். ஜூன் மாதம் 4ந்தேதி வாக்கு எண்ணிக்கை நடைபெறும் நாளில் இந்த பாதுகாப்பை மேலும் பல மடங்கு அதிகரிக்க உயர் போலீஸ் அதிகாரிகள் திட்டமிட்டு உள்ளனர்.

# ஹவாலா பணப்பரிமாற்ற கும்பலுடன் ஜாபர்சாதிக்குக்கு தொடர்பு?: தரகரிடம் தீவிர விசாரணை

சென்னை, ஏப். 21



டெல்லியில் இருந்து ஆஸ்திரேலியா, நியூசிலாந்து ஆகிய நாடுகளுக்கு சூடோ பெட்ரின் என்கிற போதைப்பொருட்களை கடத்தி விற்பனை செய்த தி.மு.க. அயலக அணி முன்னாள் நிர்வாகியான ஜாபர்சாதிக் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டு உள்ளார். அவருடன் மேலும் 4 பேரும் கைதாகியுள்ளனர்.

போதைப்பொருள் கடத்தல் மூலமாக ஜாபர் சாதிக் ரூ.2 ஆயிரம் கோடியை சுருட்டியிருப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ளது. இப்படி சட்டவிரோதமாக சம்பாதித்த பணத்தை ஜாபர்சாதிக் சினிமா மற்றும் ஓட்டல் தொழிலில் முதலீடு செய்திருப்பது அம்பலமானது. இது தொடர்பாக சினிமா இயக்குனர் அமீரிடம் டெல்லி போதைப்பொருள் தடுப்பு பிரிவு அதிகாரிகள் விசாரணை மேற்கொண்டு உள்ளனர். சினிமா உலகில் ஜாபர் சாதிக்குடன் நெருக்கமாக இருந்த மேலும் பலரிடமும் விசாரணை நடத்தப்பட உள்ளது.

இந்த வழக்கு விசாரணை டெல்லி பாட்டியாலா கோர்ட்டில் நடைபெற்று வருகிறது. ஜாபர்சாதிக்கை ஏற்கனவே அதிகாரிகள் காவலில் எடுத்து விசாரணை நடத்தியுள்ளனர். இந்த நிலையில் ஜாபர்சாதிக் மீதான போதைப்பொருள் வழக்கு விசாரணை டெல்லி பாட்டியாலா கோர்ட்டில் இன்று நடைபெறுவதாக இருந்தது.

இந்த வழக்கு விசாரணை வருகிற 22ந்தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. அன்று ஜாபர்சாதிக் உள்பட கைதான5பேரும்கோர்ட்டில் ஆஜர்படுத்தப்படுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிலையில் ஜாபர் சாதிக் ஹவாலா பணப்பரிமாற்றத்திலும் ஈடுபட்டிருக்கலாம் என்று போதைப்பொருள் தடுப்பு பிரிவு அதிகாரிகள் சந்தேகிக்கிறார்கள். இது தொடர்பானதகவல்களை அவர்கள் திரட்டி வருகிறார்கள். இந்த நிலையில் சென்னை மண்ணடியை சேர்ந்த ஹவாலா பணப்பரிமாற்ற தரகர் ஒருவர் மீது சந்தேகம் ஏற்பட்டுள்ளது. அவரை பிடித்து அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகிறார்கள்.

ஹவாலா பணத்தை பரிமாற்றம் செய்தது தொடர்பாக ஜாபர்சாதிக், மண்ணடியை சேர்ந்த தரகருடன் நெருங்கிய தொடர்பில் இருந்திருப்பதாக பரபரப்பான தகவல்கள் வெளியாகியுள்ளன. இதைத் தொடர்ந்து அதன் பின்னணி தொடர்பாக போதைப் பொருள் தடுப்பு பிரிவு அதிகாரிகள் அதிரடி விசாரணையை தீவிரப்படுத்தி உள்ளனர்.

Title-Code:-TNTAM24615
R.Dis No:- 968/2023
21.4.2024

# பிரமாண்டமாக உருவாகும் பிரேமலு 2 வெளியீடு எப்போ தெரியுமா?




இயக்குநர் கிரிஷ் இயக்கத்தில் கடந்த பிப்ரவரி மாதம் வெளியாகி பெரும் வெற்றி பெற்ற திரைப்படம் பிரேமலு. மமிதா பைஜூ, நஸ்லேன் முன்னணி கதாபாத்திரங்களில்நடித்தஇந்தபடத்திற்கு விஷ்ணு விஜய் இசையமைத்து இருந்தார்.

காதல் கலந்த காமெடி கதையம்சம் கொண்டிருந்த பிரேமலு திரைப்படம் மலையாளத்தை தொடர்ந்து தமிழ், தெலுங்குஎனபலமொழிகளில்வெளியாகி வசூலை வாரி குவித்தது. பிரேமலு படம் வசூலில் ரூ. 100 கோடியை கடந்தது.

இந்த நிலையில், பெரும் வரவேற்பை பெற்ற பிரேமலு படத்தின் இரண்டாம் பாகம் உருவாக இருக்கிறது. கிரிஷ்ஏ.டி. இயக்கும் இந்த படத்தை பகத் பாசில், திலீஷ் போத்தன் மற்றும் ஷியாம் புஷ்கரன் தயாரிக்கின்றனர்.

கிரிஷ் ஏ.டி. மற்றும் கிரன் ஜோசி இணைந்து எழுதி இருக்கும் பிரேமலு 2 திரைப்படம் 2025 ஆம் ஆண்டு வெளியாகும் என்று படக்குழு அறிவித்துள்ளது. தமிழகத்தில் இந்த படத்தை ரெட் ஜெயண்ட் மூவிஸ் நிறுவனம் வெளியிடுகிறது.

# அரண்மனை 4 'ரிலீஸ்' தேதியை தள்ளி வைத்த சுந்தர்.சி 'புது அப்டேட்'




சுந்தர்.சி இயக்கத்தில்கடந்த 2021ம் ஆண்டுவெளியானதிரைப்படம் 'அரண்மனை 3'. இந்த படத்தில் ஆர்யா, ராஷி கன்னா, ஆண்ட்ரியா, சாக்சி அகர்வால் நடித்தனர். அவ்னி சினிமேக்ஸ் நிறுவனம் சார்பில் குஷ்பு தயாரித்திருந்த இப்படத்தை உதயநிதி ஸ்டாலின், ரெட் ஜெயன்ட் மூவிஸ் நிறுவனம் வெளியிட்டது.

இப்படம் ரசிகர்கள் மத்தியில் வரவேற்பு பெற்றது. இந்நிலையில் தற்போது இயக்குனர் சுந்தர்.சி இயக்கத்தில் அரண்மனை 4 படம் உருவாகி உள்ளது. இப்படத்தின் முந்தைய 3 பாகங்களில் நடித்துள்ள சுந்தர்.சி இந்த பாகத்திலும் நடித்துள்ளார். மேலும் இதில் தமன்னா, ராஷி கண்ணா, யோகி பாபு நடித்துள்ளனர். இப்படத்திற்கு ஹிப் ஹாப் ஆதி இசையமைத்துள்ளார். கடந்த சில நாட்களுக்கு முன் இதன் 'டிரெய்லர்' வெளியிடப்பட்டது.

அரண்மனை 4 படம் வருகிற 26ந்தேதி வெளியாகும் என அறிவிக்கப்பட்டு இருந்தது. அதே தினத்தில் விஷாலின் ரத்னம் படம் :ரிலீஸ்' செய்யப்படுகிறது.

இந்நிலையில் விஷாலின் 'ரத்னம்' படத்திற்கு வழிவிடும் வகையில் சுந்தர்.சி யின் 'அரண்மனை4' படம் ஒரு வாரம் தள்ளி வெளியிட சுந்தர். சி முடிவு செய்து உள்ளார் அதன்படி வருகிற மே. 3 ந்தேதி அரண்மனை 4 படம் தியேட்டர்களில் 'ரிலீஸ்' செய்யப்படும் என சுந்தர்.சி அறிவித்து உள்ளார்.

முதலில் அறிவிக்கப்பட்ட தேதியை விட ஒரு வாரம் தாமதமாக இப்படம் வெளியாகும் என்பதால் ரசிகர்களுக்கு நீண்ட காத்திருப்பு இருக்காது எனவும் அவர் கூறி உள்ளார்.

# ஓடிடியில் வெளியாகும் அனுபமா பரமேஸ்வரனின் டில்லு ஸ்கொயர்







2022 ஆம் ஆண்டு சித்து ஜொனலகட்டா நடிப்பில் அறிமுக இயக்குனரான விமல் கிருஷ்ணா இயக்கத்தில் வெளிவந்த திரைப்படம் டிஜே டில்லு.


நேஹா ஷெட்டி, பிரின்ஸ் செசில் , பிரம்மாஜி மற்றும் பலர் இப்படத்தில் நடித்து இருந்தனர். தமன் இப்படத்திற்கு இசையமைத்து இருந்தார். படம் வெளியாகிய போது மக்களிடையே நல்ல வரவேற்பை பெற்றது.

இதன்வெற்றியைத்தொடர்ந்து இப்படத்தின் அடுத்த பாகமான டில்லு ஸ்கொயர் திரைப்படம் மாலிக் ராம் இயக்கத்தில் கடந்த மார்ச் மாதம் வெளியாகியது.

அனுபமா பரமேஸ்வரன் இப்படத்தில் முன்னணி கதாப்பாத்திரத்தில் நடித்துள்ளார். முதல்பாகம்வெற்றியைத்தொடர்ந்துஇப்பாகம் மிகப்பெரிய வெற்றியைப் பெற்றது. உலகளவில் 125 கோடி ரூபாய் வசூலை பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இதன் மூன்றாம் பாகமும் எடுக்கப்படும் என எதிர்ப்பார்க்கப் படுகிறது.

படத்தின் டிஜிட்டல் உரிமையை நெட்ஃப்லிக்ஸ் வாங்கியுள்ளனர். வரும் ஏப்ரல் 26 ஆம் தேதி நெட்ஃப்லிக்ஸ் ஓடிடி தளத்தில் தமிழ், தெலுங்கு, மலையாளம் மற்றும் கன்னடம் ஆகிய மொழிகளில் வெளியாகவுள்ளது.

# சுபாஷை மீட்டெடுக்க ஓடிடி யில் வருகிறார்கள் மஞ்சும்மல் பாய்ஸ்




கடந்த பிப்ரவரி 22 ஆம் தேதி மலையாளத்தில் உருவான மஞ்சும்மல் பாய்ஸ் என்ற படம் வெளியானது. இயக்குனர் சிதம்பரம் இயக்கிய இந்த படத்தில், ஶ்ரீநாத் பாசி, சௌபின் சாஹிர் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். கேரளாவில் ரிலீசான இந்த படம் தமிழ்நாடு மற்றும் உலகம் முழுக்க வெளியிடப்பட்டது.

மஞ்சும்மல் பாய்ஸ் படத்தை பார்த்த பலரும் இந்த படத்திற்கு பாராட்டு தெரிவித்தனர். தமிழ் திரையுலகில் முன்னணி நடிகர்கள், இயக்குநர்கள் என பிரபலங்கள் பலரும் படக்குழுவினரை பாராட்டினர்.

கமல்ஹாசன் படக்குழுவினரை நேரில் அழைத்து பாராட்டி அவர் குணா படத்தில் நடக்கும் போது ஏற்பட்ட அனுபவங்களை பகிர்ந்துக் கொண்டார்.

மஞ்சும்மல் பாய்ஸ் படத்தை இயக்கிய சிதம்பரம் அடுத்ததாக தனுஷ் நடிப்பில் படத்தை இயக்கவுள்ளார் என தகவல் வெளியாகியது. மஞ்சும்மல் பாய்ஸ் திரைப்படம் இதுவரை உலகளவில் 235 கோடி ரூபாய் வசூலித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. மலையாள திரையுலகில் மிக்பெரிய வசூலை குவித்த படங்களின் பட்டியலில் இத்திரைப்படம் முதல் இடத்தில் இருக்கிறது.

படத்தின் டிஜிட்டல் உரிமையை டிஸ்னி ப்ளஸ் ஹாட்ஸ்டார் வாங்கியுள்ளது. தற்பொழுது படம் வரும் மே 3 ஆம் தேதி ஹாட்ஸ்டார் தளத்தில் வெளியாகவுள்ளது.

# மோகன்லாலுடன் கதாநாயகி வேடத்தில் ஷோபனா 'புது அப்டேட்'





1980 ம் ஆண்டு தமிழ் சினிமாவில் குழந்தை நட்சத்திரமாக அறிமுகமானவர் ஷோபனா. 1984ம் ஆண்டு மலையாளத்திலும் அறிமுகமானார்.

'தளபதி' படத்தின் மூலம் தமிழ் சினிமாவில் ஷோபனா பிரபலமானார். அதன் பின் தமிழ், தெலுங்கு, கன்னடம், இந்தி மொழி உள்பட ஏராளமான படங்களில் நடித்து வந்தார். கடைசியாக 'கோச்சடையான்' படத்தில் நடித்தார். இந்நிலையில் பிரபல மலையாள நடிகர் மோகன்லாலுடன் ஒரு புதிய படத்தில் இணையவுள்ளதாக ஷோபனா இணைய தளத்தில் தற்போது அறிவித்துள்ளார். இது மோகன்லாலுடன் ஷோபனா இணைந்து நடிக்கும் 56 வது படமாகும். மோகன்லாலுக்கு இது 360 வது படம் ஆகும்

இப்படத்தை இயக்குனர் தருண் மூர்த்தி இயக்குகிறார்.இப்படத்திற்கு தற்காலிகமாக 'எல் 360 'என்று பெயரிடப்பட்டுள்ளது. இப்படத்தை ரஞ்சித் தயாரிக்கிறார்.மேலும், மற்ற நடிகர்கள் குறித்த தகவல் எதுவும் வெளியிடப்படவில்லை.

மேலும் நடிகை ஷோபனா "நீண்ட இடைவெளிக்கு பிறகு மலையாள படத்தில் நடிக்க உள்ளேன். இப் படத்தை தருண் மூர்த்தி இயக்குகிறார். இந்த படத்திற்கு ஹீரோ மோகன்லால் சார் என்பதை மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்து கொள்கிறேன்" என கூறியுள்ளார்.

# பார்சிலோனா ஓபன் டென்னிஸ்: மார்ட்டின் எட்செவிரி அரைஇறுதிக்கு முன்னேற்றம்



களிமண் தரை போட்டியான பார்சிலோனா ஓபன் சர்வதேச டென்னிஸ் தொடர் ஸ்பெயினில் நடந்து வருகிறது. இதில் நேற்று நடந்த கால்இறுதி ஆட்டம் ஒன்றில் உலகக் தரவரிசையில் 6வது இடத்தில் இருக்கும் கேஸ்பர் ரூட் (நார்வே) 64, 63 என்ற நேர் செட் கணக்கில் மேட்டியோ அர்னால்டியை (இத்தாலி) விரட்டி அரைஇறுதிக்கு முன்னேறினார்.

மற்றொரு ஆட்டத்தில் தாமஸ் மார்ட்டின் எட்செவிரி (அர்ஜென்டினா) 76 (74), 76 (71) என்ற நேர் செட்டில் கேமரூன் நோரியை (இங்கிலாந்து) போராடி வீழ்த்தி அரைஇறுதியை எட்டினார். இந்த வெற்றியை பெற அவருக்கு 2 மணி 29 நிமிடங்கள் தேவைப்பட்டது.

# ஒலிம்பிக் மல்யுத்த தகுதி சுற்று: முதல் நாளில் இந்திய வீரர்கள் ஏமாற்றம்



பாரீஸ் ஒலிம்பிக் போட்டியில் மல்யுத்தத்துக்கான ஆசிய மண்டல தகுதி சுற்று கிர்கிஸ்தானின் பிஷ்கேக் நகரில் நேற்று தொடங்கியது. 3 நாட்கள் நடக்கும் இந்த போட்டியில் முதல் நாளில் இந்தியாவுக்கு பெருத்த ஏமாற்றமே மிஞ்சியது.

ஆண்களுக்கான 57 கிலோ எடைப்பிரிவில் இந்தியாவின் அமன் செராவத் முதல் சுற்றில் யராசில் முக்தாருலியையும் (கஜகஸ்தான்), கால்இறுதியில் சங்வோனையும் (தென்கொரியா) தோற்கடித்து அரைஇறுதிக்கு வந்தார். அரைஇறுதியில் அவர் உஸ்பெகிஸ்தானின் குலோம்ஜோன் அப்துல்லாவுடன் மோதினார். இதில் எதிராளியின் பிடியில் இருந்து மீள முடியாமல் அடங்கிய அமன் செராவாத் 010 என்ற புள்ளி கணக்கில் தோற்று வெளியேறினார். இறுதிப்போட்டிக்கு வந்திருந்தால் பாரீஸ் ஒலிம்பிக் இடத்தை உறுதி செய்திருப்பார்.

இதே போல் 74 கிலோ பிரிவில் ஜெய்தீப், 125 கிலோ பிரிவில் சுமித் மாலிக் ஆகியோரும் தோல்வியை தழுவினர். இதற்கிடையே, மோசமான வானிலையில் துபாயில் இருந்து விமானத்தில் குறிப்பிட்ட நேரத்திற்குள் புறப்பட முடியாமல் தவித்த இந்திய வீரர்கள் தீபக் பூனியா (86 கிலோ), சுஜீத் கலக்கல் (65 கிலோ) தாமதமாக கிர்கிஸ்தான் சென்றடைந்தனர். ஆனால் போட்டிக்குரிய நேரத்திற்குள் செல்லாததால் இருவரும் களம் காண அனுமதிக்கப்படவில்லை. இன்று 2வது நாள் ஆட்டம் நடக்கிறது.

# டி20 உலகக்கோப்பை: பெரிய ரன்கள் அடிக்கவில்லை என்பதற்காக அவரை தேர்வு செய்ய மறந்து விடக்கூடாது சஞ்சய் மஞ்ச்ரேக்கர்




10 அணிகள் கலந்து கொண்டுள்ள 17வது ஐ.பி.எல் கிரிக்கெட் தொடர் இந்தியாவின் பல்வேறு நகரங்களில் சிறப்பாக நடைபெற்று வருகிறது. இந்த தொடர் நிறைவடைந்ததும் 20 அணிகள் கலந்து கொள்ளும் டி20 உலகக்கோப்பை தொடர் நடைபெற உள்ளது.

இந்த தொடர் ஜூன் 1ம் தேதி தொடங்குகிறது. இந்த தொடர் அமெரிக்கா மற்றும் வெஸ்ட் இண்டீசில் நடைபெறுகிறது. இந்த உலகக்கோப்பை தொடருக்கான இந்திய அணியில் இடம் பிடிக்க நடப்பு ஐ.பி.எல் தொடரில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்த வேண்டிய கட்டாயத்தில் இந்திய வீரர்கள் உள்ளனர்.

இதில் உலகக்கோப்பையில் தேர்வு செய்யப்படுவார்கள் என்று எதிர்பார்க்கப்படும் ஜெய்ஸ்வால் மற்றும் ரிங்கு சிங் ஆகியோர் 2024 ஐ.பி.எல். தொடரில் பெரிய ரன்கள் அடிக்கவில்லை. குறிப்பாக கடந்த வருடம் குஜராத்துக்கு எதிராக ஒரே ஓவரில் 5 சிக்சர்கள் அடித்து 14 போட்டிகளில் 474 ரன்கள் குவித்ததால் சர்வதேச கிரிக்கெட்டில் அறிமுகமான ரிங்கு சிங் இந்தியாவுக்காக கிடைத்த வாய்ப்புகளில் சிறந்த பினிஷராக செயல்பட்டு வெற்றிகளில் பங்காற்றினார்.

ஆனால் நடப்பு சீசனில் கொல்கத்தா அணியில் சுனில் நரைன் போன்ற டாப் ஆர்டர் பேட்ஸ்மேன்கள் பெரிய ரன்கள் குவித்து வருகின்றனர். அதனால் பெரியளவில் வாய்ப்பு பெறாத ரிங்கு சிங் 6 போட்டியில் 83 ரன்களை மட்டுமே 162.75 என்ற நல்ல ஸ்ட்ரைக் ரேட்டில் எடுத்துள்ளார்.

இந்நிலையில் பெரிய ரன்கள் எடுக்கவில்லை என்பதற்காக ரிங்கு சிங்கை உலகக் கோப்பையில் தேர்வு செய்ய மறந்து விடக்கூடாது என சஞ்சய் மஞ்ரேக்கர் தேர்வுக்குழுவை கேட்டுக் கொண்டுள்ளார். இது பற்றி அவர் பேசியது பின்வருமாறு:

"அவருக்கு அதிக வாய்ப்பு கிடைப்பதில்லை. எனவே ரிங்கு சிங்கை தேர்வுக் குழுவினர் மறந்து விட மாட்டார்கள் என்று நான் நம்புகிறேன். அவர் நேரடியாக இந்திய அணிக்குள் வருவதற்கு தகுதியானவர். ஏனெனில் தமக்கு கிடைத்த ஒவ்வொரு வாய்ப்பிலும் அவர்எந்தளவுக்குதொடர்ந்துநன்றாகவிளையாடினார் என்பதை நீங்கள் பார்த்திருக்கிறீர்கள்.

இந்திய அணியில் எவ்வளவு பெரிய நட்சத்திர வீரர்கள்இருந்தாலும்அவர்முக்கியவீரராகஇருப்பதை நான் விரும்புகிறேன். அதே போல நீண்ட காலமாக தடுமாறிய சஞ்சு சாம்சன் ஒரு வழியாக நம்முடைய எதிர்பார்ப்புக்கு நிகரான செயல்பாடுகளை வெளிப்படுத்தத் துவங்கியுள்ளார். நல்ல முதிர்ச்சியுடன் தொடர்ந்து அசத்தும் அவரைப் போன்ற நல்ல பார்மில் இருக்கும் வீரர் இந்திய டி20 அணிக்கு அவசியம்" என்று கூறினார்.



ஒழுக்கம் விழுப்பந் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்
விளக்கம்:
ஒழுக்கமே எல்லார்க்கும் மேன்மையைத் தருவதாக இருப்பதால், அந்த ஒழுக்கமே உயிரை விடச் சிறந்ததாகப் போற்றப்படும்.

# ஐ.எஸ்.எல். கால்பந்து: கேரளாவை வீழ்த்தி ஒடிசா அணி அரைஇறுதிக்கு முன்னேற்றம்

10வது இந்தியன் சூப்பர் லீக் (ஐ.எஸ்.எல்) கால்பந்து தொடரில் புவனேஸ்வரில் நேற்று இரவு நடந்த முதலாவது நாக் அவுட் சுற்று ஆட்டத்தில் ஒடிசா எப்.சி. கேரளா பிளாஸ்டர்ஸ் அணிகள் பலப்பரீட்சை நடத்தின. விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தில் முதல் பாதியில் இரு அணியும் கோல் எதுவும் அடிக்கவில்லை. 67வது நிமிடத்தில் கேரளா வீரர் பெடோர் சேர்னிச் கோல் அடித்து தங்கள் அணிக்கு முன்னிலை பெற்று தந்தார். 87வது நிமிடத்தில் ஒடிசா வீரர் டியாகோ மவுரிசியோ பதில் கோல் திருப்பினார்.

வழக்கமான நேரத்தில் ஆட்டம் 11 என்ற கணக்கில் சமநிலையை எட்டியதால் கூடுதலாக 30 நிமிடங்கள் ஒதுக்கப்பட்டது. இதில் 98வது நிமிடத்தில் ஒடிசாவின் இசக் வன்லால்ருட்பேலா கோல் அடித்தார். அதுவே வெற்றியையும் தீர்மானிப்பதாக அமைந்தது. முடிவில் ஒடிசா 21 என்ற கோல் கணக்கில் கேரளாவை வெளியேற்றி அரைஇறுதிக்கு முன்னேறியது.

நடைபெறும் 2வது நாக்அவுட் சுற்றில் எப்.சி. கோவா சென்னையின் எப்.சி. அணிகள் கோவாவில் மோதுகின்றன. லீக் சுற்றில் இவ்விரு அணிகளும் ஏற்கனவே 2 முறை மோதின. இரு ஆட்டத்திலும் கோவாவே வெற்றியை சுவைத்தது. இரவு 7.30 மணிக்கு தொடங்கும் இந்த ஆட்டத்தை ஸ்போர்ட்ஸ் 18 சேனல் நேரடி ஒளிபரப்பு செய்கிறது.




நமது தினகனி
செய்திகள் மற்றும்
விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.